செ.வெ.எண்:30 நாள்: 18.04.2019

**கரூர் மாவட்டம்**

**மக்களவைப்பொதுத்தேர்தல் - கரூர் மக்களவைத்தொகுதியில் 79.11 சதவீதம் வாக்குப்பதிவு - வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான திரு.த.அன்பழகன் நேரில் பார்வையிட்டு ஆய்வு**

இந்தியத்திருநாட்டின் மிகப்பெரிய ஜனநாயகத்திருவிழாவாக கருதப்படும் மக்களவைப்பொதுத்தேர்தல் இன்று தமிழகம் முழுவதும் நடைபெற்றறது. கரூர் மக்களவைத்தொகுதியைப்பொருத்தவரை இன்று(18.04.2019) காலை 7.00 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கியது.

காளியப்பனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளயில் தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் மக்களோடு மக்களாக வரிசையில் நின்று வாக்களித்து தனது ஜனநாயகக்கடமையினை ஆற்றினார்.

அதனைத்தொடர்ந்து காலை முதல் மாலை வரை தொடர்ந்து கரூர் நகராட்சிக்குட்பட்ட கோட்டைமேடு அரசு நடுநிலைப்பள்ளி, நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வேலாயுதம்பாளையம் புகளூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, திருக்காம்புலியூர் அரசு உயர்நிலைப்பள்ளி, சி.எஸ்.ஐ மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதிகிளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவினை கரூர் மக்களவைத்தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப. மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.டி.கே.இராஜசேகரன்.இ.கா.ப., ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வாக்குப்பதிவு மையங்களில் அமைதியான முறையில், பாதுகாப்பாக வாக்குப்பதிவு நடைபெறுகின்றதா என்றும், வாக்காளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் சரியாக உள்ளதா என்பது குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார்கள். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களிக்க அவர்களுக்கான சர்க்கர நாற்காலிகள் மற்றும் தன்னார்வலர்கள் தயார்நிலையில் இருப்பதையும் ஆய்வு செய்தனர்.

கரூர் மக்களவைத்தொகுதிக்குட்பட்ட கரூர், கிருஷ்ணராயபுரம்(தனி), அரவக்குறிச்சி, மணப்பாறை, வேடச்சந்துார், விராலிமலை ஆகிய 6 சட்டமன்றத்தொகுதிகளிலும் இன்று 79.11 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. இதில் ஆண்கள் 5,32,760 நபர்களும், பெண்கள் 5,64,233 நபர்களும், திருநங்கைகள் 31 நபர்களும் என மொத்தம் 10,97,024 நபர்கள் வாக்களித்துள்ளனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**